1994 ஏப்ரல் 5].

காளான்களை அழிப்பதிலே புரட்சித் தலைவி அவர்கள் முன்னணியில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 190, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

190--

ஆரணி தொகுதி, வடக்குமேட்டில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**21758*--டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆரணி தொகுதி, வடக்குமேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி தொகுதி, வடக்குமேடு கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைக்க தற்பொழுது அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே இருக்கின்ற இந்த வடக்குமேடு என்கிற இடம் தொகுதியினுடைய எல்லையிலே இருக்கிறது. அந்தக் கிராமத்திலே இருக்கிற மக்கள் அனைவரும் தங்களுடைய முக்கிய தொழிலாகக் கொண்டிருப்பது கால்நடையை வாங்கி பால் கறந்து அதன்மூலம் குடும்ப வருவாயை ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கால்நடைகளுக்கு ஏதாவது ஒன்று என்று சொன்னால் அவர்கள் அந்தப் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட 7 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிற சத்தியவிஜயநகரம் என்று சொல்லக்கூடிய கால்நடை மருத்துவமனைக்கு வர வேண்டியிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காகத்தான் அங்கே வாழ்கிற மக்களுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை வேண்டும் என்கிற வினாவினை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அவர் இல்லை என்று பதில் அளித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, என்னுடைய இந்தக் கோரிக்கையினை அமைச்சரவர்கள் கருணையோடு பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 191, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.